# இறக்குமதி செய்யப்படுவதாலேயே பொருட்கள் விலையேற்றம் கண்டுள்ளன

## மக்களவையில் தகவல்

**கோலாலம்பூர், மார்ச் 5-**

**நாட்டில் பொருட்களின் விலை உயர்வுக்கு வியாபாரிகள் காரணமல்லர். மாறாக அதிகமான பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாலேயே அவற்றின் விலை உயர்ந்துள்ளதாக உள்நாட்டு வாணிப, வாழ்க்கைச் செலவினத்துறை துணையமைச்சர் ஃபுஸியா சாலே கூறினார்.**

நாட்டில் விற்பனை செய்யப்படும் அதிகமான உணவுப்பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து சமைக்கப்படாத உணவு வகைகளாக இறக்குமதி செய்யப்படுவதே இதற்குக் காரணம் என அவர் கூறினார்.

இதன் காரணமாகவே மக்கள் அதிக விலை கொடுத்து பொருட்களை வாங்க வேண்டியதுள்ளதாகவும் அவர் விவரித்தார். இந்நாட்டிலுள்ள வியாபாரிகள் வேண்டுமென்றே பொருட்களின் விலையை உயர்த்தினால் அவர்களுக்கு எதிராகத் தமது அமைச்சு கடுமையான நடவடிக்கையை எடுக்கும் என எச்சரித்த அவர், அவர்களை 2011ஆம் ஆண்டு விலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் தமது அமைச்சின் அமலாக்கப் பிரிவினர் அணுக்கமாகக் கண்காணித்து வருவதாகவும் அவர் கூறினார்.

மக்களின் வாழ்க்கைச் செலவினம், அதிகமாக இறக்குமதி செய்யப்படும் சமைக்கப் படாத பொருட்களையே அடங்கியுள்ளது. குறிப்பாக வெங்காயம் போன்ற சமைக்கப் படாத உணவுகளை நாம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும்போது அதன் விலை உயர்ந்திருக்கும் என்றும் அவர் கூறினார்.

சில சமயங்களில் நிர்ணயிக்கப்பட்ட விலையை மீறி பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராக அமைச்சின் அமலாக்கப் பிரிவினர் எச்சரிக்கை நோட்டீசுகளை சார்வுசெய்து வருவதாகவும் அவர் சொன்னார்.

இந்நிலையில் அவர்கள் இறக்குமதி செய்யப்பட்ட சமைக்கப்படாத பொருட்களின் விலையைத் தமது அமைச்சிடம் காண்பிக்க வேண்டும். அவை நியாயமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படாது என அவர் மக்களவையில் தெரிவித்தார்.

நேற்று மக்களவையில் கேள்வி பதில் நேரத்தின்போது ஜெலுபு உறுப்பினர் (பாரிசான் நேஷனல்) டத்தோஸ்ரீ ஜலாலுடின் அலியாஸின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் அவர் இவ்வாறு சொன்னார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், நாட்டிற்குத் தேவைப்படும் அதிகமான சமைக்கப்படாத உணவுப் பொருட்கள் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுவதாலேயே இந்நாட்டு மக்கள் பொருள் விலை உயர்வை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகள் ஆனாலுங்கூட நாம் இன்னும் வெளிநாடுகளில் இருந்தே சமைக்கப்படாத உணவுகளை இறக்குமதி செய்யும் நிலையை எதிர்நோக்கி வருகிறோம்.

அதேவேளையில் அரசாங்கம் இந்நாட்டிலுள்ள தொழிலாளர்களின் சம்பள முறையை மறுஆய்வு செய்யும் நிலை இருந்தாலுங்கூட தொழிலாளர்களின் சம்பளம் உயரவில்லை. மாறாகப் பொருட்களின் விலை தொடர்ந்து ஏற்றம் கண்டு வருவதாக அவர் கூறினார்.

அரசாங்கம் பொருட்களின் விலையைக் கட்டுப் படுத்தவில்லை என்பது அர்த்தமாகாது. பொருட்களின் விலை உயர்வுகண்டு வருவது அனைத்துலக அளவில் எல்லா நாடுகளும் எதிர்நோக்கிவரும் ஒரு பிரச்சினையாகும்.

உதாரணத்திற்கு இந்திய அரசாங்கம் நம் நாட்டுக்கு அரிசியை ஏற்றுமதி செய்ய மறுத்துவருகிறது. அதே வேளையில் வெங்காய ஏற்றுமதிக்கான வரியையும் உயர்த்தியுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

இதனிடையே கடந்தாண்டு விதிமுறைகளை மீறிய 5,904 வியாபாரிகளுக்கு எதிராக தமது அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறிய அவர், அவர்களுக்கு 1,466,600 ரிங்கிட்டை அபராதமாக விதித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

### 224 தொலைபேசி எண்களுக்குத் தடை

நாட்டில் பல்வேறு ஏமாற்று வேலைகளில் ஈடுபட்டதாக கடந்த ஜனவரி மாதம் மலேசிய பல்லூடக, தொடர்பு ஆணையம் 224 தொலைபேசி எண்களுக்குத் தடை விதித்துள்ளதாகப் பிரதமர்துறை துணை அமைச்சர் (சட்டம் - உருமாற்றம்) எம்.குலசேகரன் சொன்னார்.

நாட்டிலுள்ள பல்வேறு தொலைத்தொடர்பு நிறுவனங்களின் ஒத்துழைப்போடு மலேசிய பல்லூடக, தொடர்பு ஆணையம் இந்நடவடிக்கையை எடுத்துள்ளதாக அவர் கூறினார்.

பொதுமக்கள் கொடுத்த புகாரைத் தொடர்ந்து 131 தொலைபேசி எண்களை இந்த ஆணையம் அடையாளம் கண்ட பின்னர் அதனை ரத்துசெய்ததாகக் கூறிய அவர். எஞ்சிய 93 தொலைபேசி எண்கள் செயலிழக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார். மேற்குறிப்பிட்ட இந்தத் தொலைபேசிகள் அனைத்தும் போலீஸ் படையின் முக்கிய ஏமாற்று வேலைகளில் சம்பந்தப்பட்ட புகார்களில் இணைக்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், இந்தத் தொலைபேசி எண்கள் பின்னர் போலீஸ் மூலம் பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் கடந்தாண்டு ஆகஸ்டு மாதம் வரை மலேசிய பல்லூடக தொடர்பு ஆணையம் 155 நிறுவனங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்துள்ளதாகக் கூறிய அவர், 1,577 புகார்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று கூறினார்.

காரணம் அப்புகார்களுக்கு எதிராகப் போதுமான ஆதாரங்கள் இல்லாததால் அந்நிறுவனங்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று விளக்கம் அளித்தார்.

கடந்த 2022ஆம் ஆண்டு முதல் 2023ஆம் ஆண்டு வரை 107,716 ஏமாற்று வேலை நிகழ்ந்துள்ளதாகக் கூறிய அவர், இதன்வழி 3.2 பில்லியன் ரிங்கிட் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் இயங்கலை வழி நிகழ்ந்து வரும் நிதி மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் கடந்த 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மலேசிய பல்லூடக, தொடர்பு ஆணையம் தோற்றுவிக்கப்பட்டது.

இதனை போலீஸ், பேங்க் நெகாரா மலேசியா, தேசிய நிதி மோசடி துடைத்தொழிப்பு மையம், நாட்டிலுள்ள நிதி நிறுவனங்கள் உட்பட தொலைத்தொடர்பு நிறுவனங்களும் அணுக்கமாகக் கண்காணித்துவரும் என்றும் அவர் கூறினார்.

பொதுமக்களிடம் இருந்து புகார் பெற்றதும் மலேசியப் பல்லூடக தொடர்பு ஆணையம் இந்த ஏமாற்று வேலைகளை அடையாளம் காணும். புகார்தாரரின் வங்கியில் பணம் இன்னும் சேமிப்பில் இருக்குமானால் அதனை முடக்கம் செய்வதற்கான நடவடிக்கையில் இது இறங்கும் எனவும் அவர் கூறினார்.




### விரைவில் சட்டதிருத்தம்

நாட்டில் புகார் கொடுக்கும் தரப்பினரைப் பாதுகாக்கும் வகையில் தகவல் கொடுக்கும் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அரசாங்கம் திட்டம் கொண்டுள்ளதாகப் பிரதமர்துறை துணையமைச்சர் (சட்டம் - உருமாற்றம்) எம்.குலசேகரன் கூறினார்.

இந்தச் சட்டதிருத்தம் மீதான ஆய்வு முடிவுற்ற பின்னர் இந்தச் சட்டதிருத்தம் இவ்வாண்டு மக்களவையில் தாக்கல் செய்யப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சட்டதிருத்தம் வழி தகவல் கொடுக்கும் தரப்பினருக்குக் கூடுதல் பாதுகாப்பு அளிக்கும் அதேவேளையில் 711ஆவது சட்டத்தின் கீழ் எழுப்பப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என்றார்.

நேற்று மக்களவையில் புக்கிட் குளுகோர் உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) ராம் கர்ப்பால் சிங் கேள்விக்குப் பதில் அளித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

### அரசாங்கத்தில் மாற்றுத்திறனாளிகள்

பொதுச் சேவைத்துறையில் குறைந்தது ஒரு விழுக்காடு மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை கொடுக்க வேண்டும் என்ற கொள்கை தற்போது மறுஆய்வு செய்யப்பட்டு வருவதாக கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலிஹா முஸ்தாபா கூறினார்.

காரணம் கடந்த 2014ஆம் ஆண்டு முதல் கடந்தாண்டு வரை சுமார் 10 ஆண்டுகளில்கூட அரசாங்கத்தால் இந்த இலக்கை அடைய முடியவில்லை என அவர் தெரிவித்தார்.

இதற்குக் காரணம் மற்றவர்களைவிட மாற்றுத்திறனாளிகள் அரசாங்கத்துறையில் வேலை செய்வதற்குச் செய்யப்படும் விண்ணப்பங்கள் இதுவரை ஒரு விழுக்காடு கூட எட்டவில்லை எனவும் அவர் சொன்னார்.

மாற்றுத்திறனாளிகளை அரசாங்கத் துறையில் வேலைக்குச் சேர்ப்பதில் அரசாங்கம் பல்வேறு சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளதால் இந்தக் கொள்கையை மறுஆய்வு செய்ய வேண்டியது அவசியமாகும் எனவும் அவர் கூறினார்.

நேற்று மக்களவையில் கேள்வி பதில் நேரத்தின்போது ஆராவ் உறுப்பினர் (பெரிக்காத்தான் நேஷனல்) டத்தோஸ்ரீ டாக்டர் ஷஹிடான் காசிமின் கேள்விக்குப் பதில் அளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதேவேளையில் கடந்த 2014ஆம் ஆண்டு 0.23 விழுக்காடு மாற்றுத்திறனாளிகள் அரசாங்கத் துறையில் வேலைக்குச் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறிய அவர், இவ்வெண்ணிக்கை 2015ஆம் ஆண்டு 0.25 விழுக்காடாகவும் 2016ஆம் ஆண்டு 0.28 விழுக்காடாகவும் 2017ஆம் ஆண்டு முதல் 2022ஆம் ஆண்டு வரை 0.29 விழுக்காடாகவும் கடந்த 2023ஆம் ஆண்டு 0.3 விழுக்காடாகவும் இருந்துவந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனிடையே கெப்போங் உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) லிம் லிப் எங்கின் கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் கோலாலம்பூர் மாநகர் மன்றத்தில் 0.5 விழுக்காடு மாற்றுத்திறனாளிகளுக்கு வேலை கொடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் மாற்றுத்திறனாளிகளுக்குக் கூடுதல் வேலை கொடுக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையைத் தாம் ஆதரிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

### காரசாரமான வாக்குவாதம்

நாட்டின் பாரம்பரிய உணவுகளுள் ஒன்றாக பாக் குட் தே பட்டியலிடப்பட்டதைத் தொடர்ந்து நேற்று பல நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே காரசாரமான வாக்குவாதம் ஏற்பட்டது.

உலுலங்காட் உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) முகமட் சானி ஹம்சான் நேற்று மக்களவையில் மாமன்னர் உரை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியபோது குறிப்பிட்ட சில தரப்பினர் இதனை அரசியலாக்கி வருவது குறித்து கேள்வி எழுப்பினார்.

பன்றி இறைச்சியைப் பயன்படுத்தினால் அது ஹலால் ஆகாது. அதேவேளையில் மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி, கோழி, வாத்து, வான்கோழி இறைச்சிகளை நாம் பயன்படுத்தலாம் என்றார்.

இதுபோன்ற அனைத்து விவகாரங்களையும் நாம் ஏன் அரசியலாக்க வேண்டும்? இது நம் நாட்டுப் பிரச்சினை என அவர் நேற்று மக்களவையில் கூறினார்.

சிலாங்கூர் மாநிலத்திலுள்ள கிள்ளானில் உருவான இந்தப் பாக் குட் தே அண்மையில் பாரம்பரிய உணவாக அறிவிக்கப்பட்டுள்ளதாக ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தன.

முன்னதாக பாரிட் புந்தார் உறுப்பினர் (பெரிக்காத்தான் நேஷனல்) முகமட் மிஸ்பாஹுல் முனிர் மஸ்டுக்கி பேசுகையில் மக்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தும் இதுபோன்ற உணவுகள் குறித்து அரசாங்கம் மக்களுக்கு விளக்கம் அளிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டிருந்தார்.

அப்போது எழுந்த ஈப்போ தீமோர் உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) ஹோவர்ட் லீ, பாக் என்பது ஹோக்கி யான் மொழியாகும் என அவையில் கூறினார். பாக் என்றால் ஹோக்கியான் மொழியில் இறைச்சி என்று அர்த்தமாகும்.

பாக் என்றால் பன்றி இறைச்சி என அர்த்தம் கொள்வது தவறாகும் என அவர் தெரிவித்தார். இதனிடையே இவ்விவகாரத்தை ஒற்றுமை அரசாங்கத்தைச் சேர்ந்த தலைவர் ஒருவர் பெரும் சர்ச்சையாக்கி வருவது குறித்து தாம் பெரும் அதிருப்தி கொள்வதாக செபூத்தே உறுப்பினர் (பக்காத்தான் ஹராப்பான்) திரேசா கோக் கூறினார்.

அவர் பெயரைக் குறிப்பிடாவிட்டாலும் அம்னோ இளைஞர் பிரிவுத் தலைவர் டாக்டர் முகமட் அக்மால் சாலேயை குறிப்பிடுகிறார் என நம்பப்படுகிறது. அண்மையில் மக்களவையில் அவர் சுற்றுலா, கலை, பண்பாட்டுத்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ தியோங் கிங் சிங்கிடம் வாக்குவாதம் செய்ததை அவர் சுட்டிக்காட்டினார்.

பாக் குட் தே தேசியப் பாரம்பரிய உணவாகப் பட்டியலிடப்பட்டது குறித்து ஒற்றுமை அரசாங்கத்தின் தலைவர் ஒருவர் சர்ச்சையாக்கி வந்துள்ளது குறித்து தாம் பெரும் அதிருப்திகொள்வதாக திரேசா கோக் கூறினார்.


டாக்டர் ஸலிஹா முஸ்தாபா


ஹோவர்ட் லீ


திரேசா கோக்


முகமட் சானி ஹம்சான்


எம். குலசேகரன்


லிம் லிப் எங்


ஃபுஸியா சாலே

